05.04.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 56.60 அடி



மேட்டூர் அணையின் நீர் மட்டம் 56.60 அடியாக உள்ளது. திங்கள்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 51 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்தின் அளவைவிட குடிநீர்த் தேவைக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால் திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 56.60 அடியாகச் சரிந்தது. அணையின் நீர் இருப்பு 22.22 டி.எம்.சியாக இருந்தது.

**பாம்பன் பகுதியில் ஒரே நாளில் கிடைத்த ஒரு டன் வெங்கனா மீன்**



பாம்பன் பகுதியில் திங்கள்கிழமை ஒரே படகில் ஒரு டன்னுக்கு மேலாக வெங்கனா வகை மீன் கிடைத்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். பாம்பன் பகுதியிலிருந்து மகத்துவம் என்பவரது படகில் ஞாயிற்றுக்கிழமை காலையில் மீன்பிடிக்க தென் கடல் பகுதிக்குச் சென்றனர். இரவு முழுவதும் மீன்களை பிடித்துக்கொண்டு திங்கள்கிழமை கரை திரும்பினர். வெங்கனா எனப்படும் மீன் ஒரு டன் வரை கிடைத்தது. இந்த மீன் ஒரு கிலோ ரூ. 30 முதல் 40 வரை விலைபோகும். ஆனால், அதிகமான மீன் கிடைத்ததாலும், மீனின் அளவு சிறியதாக இருந்ததாலும் ஒரு கிலோ ரூ. 15 முதல் 20 வரையே வியாபாரிகள் வாங்கிச் சென்றதாகவும், அதிகமான மீன்கள் கிடைத்தும் குறைவான விலையே கிடைத்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

**உணவு உற்பத்தியில் தமிழகம் முதலிடம்: அரசு கூடுதல் தலைமைச் செயலர் கே.சண்முகம்**

நாட்டிலேயே உணவு உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என அரசு கூடுதல் தலைமைச் செயலர் கே.சண்முகம் கூறினார். மதுரையில் திங்கள்கிழமை நடைபெற்ற சிறுதானிய பயன்பாட்டை அதிகரிக்கும் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: சிறுதானிய உற்பத்தியை அதிகரித்து,

அதன் பயன்பாட்டை கூடுதலாக்கும் திட்டம் வறுமை ஒழிப்புத் திட்டத்தின்படி செயல்படுத்தப்படவுள்ளது.

சிறுதானிய உற்பத்தி பெருக்கம், பயன்பாட்டை பரவலாக்கல் குறித்து விவசாயம், ஊரக வளர்ச்சித் துறை செயலர்களுக்கும் கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடந்த 1956 ஆம் ஆண்டு சிறுதானியங்கள் 15 லட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது 5 லட்சம் ஹெக்டேரிலே உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், பரப்பளவு குறைந்தாலும் உற்பத்தியின் அளவு 9.08 லட்சம் டன்னிலிருந்து 10 லட்சம் டன்னாகவே உள்ளது. நாட்டில் அனைத்து பயிர்தானிய உற்பத்தியும் 50 சதவீதம் கூடுதலான நிலையில், சிறுதானிய உற்பத்தி மட்டும் அதே நிலையில் நீடிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக சிறுதானிய உணவு குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

சிறுதானிய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமெனில் அதன் மதிப்பூட்டும் செயல்பாட்டில் நேரடியாக விவசாயிகள் பங்கேற்கவேண்டும். நாட்டிலேயே தமிழகம் உணவு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. கடந்த 50 ஆண்டுகளில் 50 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 110 டன்னாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் தரிசு நிலங்களை சிறுதானிய உணவு உற்பத்திக்கானதாக மாற்றும் வகையில் கனடா நாட்டு உதவியுடன் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றார்.

## உணவு உற்பத்தியில் தமிழகம் முதலிடம்

நாட்டிலேயே உணவு உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என அரசு கூடுதல் தலைமைச் செயலர் கே.சண்முகம் கூறினார்.

மதுரையில் திங்கள்கிழமை நடைபெற்ற சிறுதானிய பயன்பாட்டை அதிகரிக்கும் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: சிறுதானிய உற்பத்தியை அதிகரித்து, அதன் பயன்பாட்டை கூடுதலாக்கும் திட்டம் வறுமை ஒழிப்புத் திட்டத்தின்படி செயல்படுத்தப்படவுள்ளது.

சிறுதானிய உற்பத்தி பெருக்கம், பயன்பாட்டை பரவலாக்கல் குறித்து விவசாயம், ஊரக வளர்ச்சித் துறை செயலர்களுக்கும் கருத்துரு

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நாட்டில் அனைத்து பயிர்தானிய உற்பத்தியும் 50 சதவீதம் கூடுதலான நிலையில், சிறுதானிய உற்பத்தி மட்டும் அதே நிலையில் நீடிக்கிறது. நாட்டிலேயே தமிழகம் உணவு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. கடந்த 50 ஆண்டுகளில் 50 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 110 டன்னாத உயர்ந்துள்ளது. தமிழகத்தில் தரிசு நிலங்களை சிறுதானிய உணவு உற்பத்திக்கானதாக மாற்றும் வகையில் கனடா நாட்டு உதவியுடன் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றார்.

## பவானிசாகர் வனத்தில் அதிகரித்து வரும் மரஅணில்

பவானிசாகர் வனப் பகுதியில் மரஅணில் எனும் பறக்கும் அணில்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வனத்துறையினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் யானைகள், மான்கள், சிறுத்தைப்புலி உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. இதுதவிர, வெண்முதுகு வல்லூறு, மயில் உள்ளிட்ட பறவைகளின் இனப்பெருக்கமும் உயர்ந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

தற்போது, இங்கு அரிய வகையைச் சேர்ந்த மரஅணில் எனும் பறக்கும் அணில்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. மரங்கள் அதிகமாக உள்ள இடங்களில் காணப்படும் பறக்கும் அணில்களுக்கு நீண்டவால், இறகுகள் உள்ளன.

கருப்பு நிறமுடைய அபூர்வ வகை பறக்கும் அணில் இரவில் மட்டுமே நடமாடும் தன்மையுடையது. கடல் மட்டத்தில் இருந்து 1000 முதல் 1800 மீட்டர் உயரத்தில் பசுமைமாறா காடுகளில் வாழும் இந்த அணில் சூரிப்பழம், காட்டுக் கொய்யா, நெல்லி, ஈச்சம்பழம் உள்ளிட்ட பழங்கள், மரப்பட்டை ஆகியவற்றைத் தின்று வாழ்கிறது.

செழிப்பான இடங்களில் மட்டுமே பறக்கும் அணில்கள் தங்களது வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்ளக்கூடியவை என்பதால் பவானிசாகர் வனப்பகுதி செழிப்பாக உள்ளது என்பதற்கு இதுவே ஒரு சான்று என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிடிடிஏ ஏல மையத்தில் 89 சதவீத தேயிலைத் தூள் விற்பனை

சிடிடிஏ ஏல மையத்தில் 89 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் ஏலம் குறித்த சந்தை நிலவரம் திங்கள்கிழமை வெளியிடப்பட்டது. அதன்படி, இந்த ஏலத்தில் மொத்தம் 10 லட்சத்து 15 ஆயிரம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 7.19 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 2.96 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் பங்களிப்பு அதிகரித்திருந்தால் 89 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டது.

இருப்பினும், அனைத்து ரகத்துக்கும் கிலோவுக்கு ரூ. 1 வரை விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி சாதாரண வகை இலை ரகத்துக்கு ரூ. 60 முதல் ரூ. 70 வரையும், உயர்வகைக்கு ரூ. 110 முதல் ரூ. 140 வரையும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகைக்கு ரூ. 82 முதல் ரூ. 87 வரையும், உயர் ரகத்துக்கு ரூ. 100 முதல் ரூ. 145 வரையும் விலை கிடைத்தது. சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக ரூ. 201, ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு ரூ. 239 விலை கிடைத்தது.

அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாள்களில் நடைபெறவுள்ளது. இதில், மொத்தம் 9.56 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்குத் தயாராக உள்ளது.

## வெண் பன்றி வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி

வெண் பன்றி வளர்ப்பு குறித்து நாமக்கல்லில் இலவசப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை (ஏப்.5) நடைபெறுகிறது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு வெண் பன்றி வளர்ப்பு என்ற தலைப்பில் ஒருநாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இப் பயிற்சி முகாமில் பன்றி வளர்ப்பின் நன்மைகள், பன்றி இனங்களைத் தேர்வு செய்யும் முறைகள், பண்ணை அமைவிடம், பண்ணை வீடு, இனப் பருக்கம், சினைப் பன்றி பராமரிப்பு, பன்றி குட்டிகள் பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய்ப் பிரச்னைகள், நோய்த் தடுப்பு முறைகள் குறித்து விரிவாக பயிற்சியளிக்கப்படுகிறது. இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி மாவட்டத்தில் ஏப். 15 இல் மீன்பிடி தடைக்காலம் தொடக்கம்

தூத்துக்குடி மாவட்டத்தில் விசைப்படகுகளின் மீன்பிடி தடைக்காலம் ஏப். 15 ஆம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983 இன் கீழ் தமிழகத்தின் கிழக்கு கடற்பகுதியில் மீன் இனப்பெருக்கக் காலத்தை கருத்தில் கொண்டும், மீன்வளத்தை பாதுகாக்கும் வகையிலும் திருவள்ளூர் வருவாய் மாவட்ட கடல் பகுதியில் இருந்து கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகரம் வரை ஆண்டுதோறும் 45 நாள்கள் மீன்பிடி தடைக்காலமாக கருதப்பட்டு வருகிறது.

அதாவது ஏப்.15 ஆம் தேதி முதல் மே மாதம் 29 ஆம் தேதி வரை உள்ள கால அளவில் மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இழுவை படகுகளைக் கொண்டு கடலில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு ஏற்கெனவே அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணையின்படி நிகழாண்டில் ஏப். 15 ஆம் தேதி முதல் மே மாதம் 29 ஆம் தேதி வரை மீன்பிடிக்க, மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் கடலுக்கு செல்லக்கூடாது என அறிவுறுத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடலூர் உழவர் சந்தையில் :செயற்கை முறையில் பழுக்க வைக்கப்படும் பழங்கள்**

கடலூர் உழவர் சந்தையில் பழங்கள் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது.

கடலூர் பேருந்து நிலையம் அருகே உழவர்சந்தை செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் 70 கடைகள் அனுமதி பெற்று அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருபவர்கள் சந்தைக்கு வெளியே கடை அமைத்து வாழைப்பழம் உள்ளிட்டவைகளை விற்பனை செய்வது வழக்கம்.

இந்த நிலையில், விற்பனைக்காக கொண்டு வரப்படும் வாழைத்தார்கள் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்படுவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டினர். உழவர் சந்தையில் வைத்து பழங்கள் மீது சிலவகை ரசாயனத் திரவம் ஊற்றப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இந்த திரவம் ஊற்றப்பட்ட சில மணி நேரத்திலேயே காய்கள் பழமாகி விடுகிறதாம். இதனை உண்பதால் உடல்நலக் கோளாறுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். இதுகுறித்து மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கையில், பழங்களை இயற்கை முறையில் தான் பழுக்க வைக்க வேண்டும்.

எனினும் எத்திலின் என்ற அமிலத்தை திரவம், வாயு நிலையில் பயன்படுத்தலாம். கார்பைடு கல் வைத்து பழுக்க வைப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

எனினும், உழவர் சந்தையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காய்கறிகள் விலை சற்றே உயர்வு

காஞ்சிபுரம்:கடந்த இரண்டு மாதங்களாக குறைந்திருந்த காய்கறிகள் விலை, கோடை காலம் ஆரம்பித்துள்ளதால் சற்றே அதிகரிக்க துவங்கியுள்ளது.

காஞ்சிபுரம் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கத்தரி, வெண்டை, பாகற்காய் போன்ற காய்கள் பயிரிடப்பட்டு, சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன. பிற காய்கறிகள், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து வாங்கி வரப்படுகின்றன.இவ்வாறு, வெளி மாவட்டங்களில் இருந்து வரும், பீன்ஸ், அவரை, சவ்சவ், பாகற்காய், கேரட், உருளை கிழங்கு, கருணை கிழங்கு போன்றவை விலை அதிகரித்துள்ளன.

### காய்கறி தோட்டங்களுக்கு 'ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர்

கோத்தகிரி: கோத்தகிரி கூக்கல்தொரை பகுதியில், காய்கறிகளுக்கு 'ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம், நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இனிவரும் நாட்களில் அக்னி நட்சத்திரம் துவங்க உள்ளதால், வெயிலின் உக்கிரம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், நீர் ஆதாரங்கள் வறண்டுவரும் நிலையில், விவசாயி நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் சிக்கல் அதிகரித்துள்ளது.

கோத்தகிரி பகுதியில், கூக்கல்தொரை, நெடுகுளா மற்றும் சுள்ளிகூடு பகுதியில், அதிகளவில் காரட், முட்டைகோஸ், பீன்ஸ், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி உள்ளிட்ட பயிர் கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. வறட்சி காரணமாக, தண்ணீர் வற்றிவரும் நிலையில், விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல், விவசாயிகள் திணறி வருகின்றனர்.

ஆற்றுப்படுக்கைகளில், நீரோடையை ஒட்டி வெட்டியுள்ள கிணறுகளில் தண்ணீர் சேமித்து, 'மோட்டர் பம்ப்' உதவியுடன், 'ஸ்பிரிங்லர்' மூலம், தண்ணீர் பாய்ச் சும் பணியில், விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த சூழல் இல்லாத நிலங்களில், வறட்சியால், பயிர்கள் வாட்டம் கண்டுள்ளன.

விவசாயி ராமன் கூறுகையில், “மழையை நம்பி, மேடான பகுதியில் காய்கறி பயிர் செய்யப்பட்டுள்ளது. ஓடைகளில் தண்ணீர் வரத்து வெகுவாக குறைந்துவிட்டதால், காய்கறிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழைப் பெய்தால்தான் தீர்வுக் கிடைக்கும்” என்றார்.

### வேளாண் பல்கலையில் தேனீ வளர்ப்பு பயிற்சி

கோவை: தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம், தமிழ்நாடு வேளாண் பல்கலையில் நாளை நடக்கிறது.

தமிழ்நாடு வேளாண் பல்கலையின், பூச்சியியல்துறை சார்பில் மாதந்தோறும் தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. இதில், தேனீ இனங்களை கண்டுபிடித்தல், பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம், தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம், தேனைப் பிரித்தெடுத்தல் மற்றும் நோய் நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இம்மாதத்திற்கான பயிற்சி முகாம், நாளை காலை, 10:00 முதல், மாலை, 5:00 மணி வரை நடக்கிறது. விருப்பமுள்ளோர், காலை, 9:00 மணிக்கு வேளாண் பல்கலை பூச்சியியல் துறைக்கு வரலாம். இதற்கு கட்டணமாக, 250 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். விபரங்களுக்கு, 0422 6611214 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## 20 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

சூலுார்: சூலுார் வட்டாரத்தில், 20 ஆயிரத்து 200 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

சூலுார் வட்டாரத்தில் இருகூர், அரசூர், வெங்கிட்டாபுரம், கருமத்தம்பட்டி, செங்கத்துறை, வாகராயம்பாளையம்,பதுவம்பள்ளி உள்ளிட்ட இடங்களில் கால்நடை மருந்தகங்களும், சூலுாரில் மருத்துவமனையும் செயல்படுகின்றன.

கடந்த மார்ச், 1 முதல், 21ம்தேதி வரை நடந்த, கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் மொத்தம், 20 ஆயிரத்து 200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. தொடர்ந்து, விடுபட்ட கால்நடைகள் கணக்கீடு செய்யப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டது.

சூலுார் கால்நடை மருத்துவமனை டாக்டர் பாஸ்கர் கூறுகையில்,“ சூலுாரில் மட்டும், 400 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. அடுத்த முகாம் வரும் செப்டம்பர் மாதத்தில் நடக்கவுள்ளது. கால்நடை வளர்ப்போர், முகாமில் பங்கேற்று, தங்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும்,” என்றார்.

## வேளாண் இடுபொருள் அங்காடி உழவர் மன்ற கூட்டமைப்பு திறப்பு

மேட்டுப்பாளையம்: காரமடையில் உழவர் மன்றங்களின் கூட்டமைப்பு சார்பில், வேளாண் இடுபொருள் மற்றும் விளைபொருட்கள் அங்காடி திறக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய உழவர் மன்றங்களின் கூட்டமைப்பு சார்பில், காரமடை பஸ் ஸ்டாண்ட் பேரூராட்சி வணிக வளாகத்தில் இயற்கைக்கு உகந்த வேளாண் இடுபொருட்கள் மற்றும் விளை பொருட்கள் அங்காடி திறக்கப்பட்டது. கூட்டமைப்பு தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். செயலாளர் நந்தகுமார் வரவேற்றார்.

வேளாண் விஞ்ஞானி குமார வடிவேல் அங்காடியை திறந்து வைத்து பேசியதாவது:

அங்காடியில் தரமான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் (இயற்கை மற்றும் செயற்கையான) கம்பெனியிலிருந்து நேடியாக கொள்முதல் செய்து, எவ்வித லாபம் இல்லாமல் விற்பனை செய்யப்படுகிறது. வெளியே கடைகளில் விற்பனை செய்வதை விட, மிகவும் குறைவான விலைக்கு விற்பனை செய்யப்படும். எந்த பயிருக்கு, எந்த மருந்து அடிக்க வேண்டும் என விஞ்ஞானிகள் பரிந்துரை செய்யும் தரமான மருந்துகள் மட்டுமே விற்பனை செய்யப்படும்.

விவசாயிகள் விளை பொருட்கள் இங்கு விற்பனை செய்யப்படும். இந்த அங்காடியில் ஒவ்வொரு மாதம் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டமும், ஒவ்வொரு கிராமங்களில் ஆலோசனைக் கூட்டமும் நடைபெறும். அதில் வேளாண் விஞ்ஞானிகள் பங்கேற்று, விவசாயிகளுக்கு எப்பருவத்தில் எந்த பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டும், எப்பயிர்களுக்கு மருந்து அடிக்க வேண்டும் என்ற விபரங்களை கூறுவர். இவ்வாறு, விஞ்ஞானி குமார வடிவேல் பேசினார்.

நிகழ்ச்சியில், உழவர் மன்ற நிர்வாகிகள், விவசாயிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## தேங்காய் பருப்பு விலை உயர்வு: தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் பகுதியில் தேங்காய் பருப்பு விலை உயர்ந்துள்ளதால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

கரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட நொய்யல், ஒரம்புபாளையம், வேட்டமங்கலம், குளத்துப்பாளையம், சேமங்கி, மரவாபாளையம், திருக்காடுதுறை போன்ற பகுதிகளில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் தென்னை பயிரிட்டுள்ளனர். தென்னை மரங்களில் இருந்து பறிக்கும் தேங்காய்களை உடைத்து அதன் பருப்புகளை வெயிலில் நன்கு உலர வைக்கின்றனர். அதன்பின், சாலைப்புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கு ஏல முறையில் விற்பனை நடப்பது வழக்கம். இந்த ஏலத்தில் சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்து வியாபாரிகளும், எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்களின் ஏஜன்ட்களும்

பங்கேற்று தேங்காய் பருப்பை வாங்கிச் செல்கின்றனர். கடந்த வாரம் 100 கிலோ கொண்ட தேங்காய் பருப்பு, ரூ.4,500க்கு விற்பனையானது. தற்போது, சுட்டெரிக்கும் கோடை வெயில் காரணமாக இளநீராக இருக்கும் போதே பலர் பறித்து விடுகின்றனர். இதன் காரணமாக தேங்காய் பருப்பு வரத்து குறைவு காரணமாக இந்த வாரம், 100 கிலோ கொண்ட தேங்காய் பருப்பு, ரூ. 5,200க்கு விற்பனையானது. இதனால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பதநீர் வரத்து அதிகரிப்பு - கருப்பட்டி உற்பத்தி தீவிரம்

ஸ்ரீவில்லிபுத்துார்: ஸ்ரீவில்லிபுத்துார் பகுதியில் பதநீர் வரத்து அதிகரித்துள்ளதால், கருப்பட்டி உற்பத்தி தீவிரமாகி உள்ளது.

கோடைகாலத்தின் இயற்கை குளிர்பானம் பதநீர். வெப்பம், தண்ணீர் தாகம் தீர்ப்பதுடன் உடலுக்கு பலமும் கொடுக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் பதநீர் வரத்து துவங்கும். தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் ஏராளமான மக்கள் அதிகாலையிலே பதநீர் வாங்கி குடிக்கின்றனர். பலர் வீடுகளுக்கும் வாங்கி செல்கின்றனர். தற்போது பதநீர் வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நகரின் பல்வேறு தெருக்களிலும் தள்ளுவண்டி , தலைசுமையாக பெண்களும் பதநீர் விற்று வருகின்றனர். நுங்கு போட்ட பதநீரும் விற்பனையாகிறது.

இதனால் ஸ்ரீவில்லிபுத்துார், திருவண்ணாமலை, மம்சாபுரம் பகுதிகளில் தற்போது கருப்பட்டி காய்ச்சபட்டு வருகிறது. நகரின் மேற்கு பகுதிகளில் உள்ள வயல்களில் கருப்பட்டி ஆலைகள் அமைக்கபட்டுள்ளன. பல தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். உற்பத்தி அதிகரித்தால் கருப்பட்டி விலை குறைய வாய்ப்பிருக்கிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேளாண்.பல்கலையில் ஆற்றல் சேமிப்பு விழிப்புணர்வு முகாம்

கோவை, : கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் ஆற்றல் சேமிப்பு விழிப்புணர்வு முகாம் பல்கலைக்கழக பொன்விழா அரங்கில் நடந்தது. இதில் மாணவர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். பெட்ரோலியம் சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிற்றுநர் வைத்தீஸ்வரன் கலந்துகொண்டு பேசுகையில்,” பெட்ரோலை மிச்சப்படுத்தும் நோக்கில் சிசி குறைவான டூவிலர்களை பயன்படுத்தவேண்டும்.

மற்ற நாடுகளை ஒப்பிடும்போது இந்திய 50 முதல் 55 சதவீதம் வரை பெட்ரோலை இறக்குமதி செய்கிறது. வாகனங்களில் ரேடியல் டயர் உபயோகிக்கும் மூலம் 5 முதல் 7 சதவீதம் பெட்ரோல் சேமிக்க முடியும்”, என்றார். பின்னர் மாணவர்களுக்கு ஆற்றல் சேமிப்பு குறித்த புத்தகம், கையேடு ஆகியவை வழங்கப்பட்டது. முகாமில், 100க்கும் மேற்பட்ட வேளாண் பட்டப்படிப்பு நலப்பணித்திட்ட மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் லதா, மாணவ பிரதிநிதி ஹாதில்மோன் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

## கும்பகோணம் பகுதியில் உளுந்து விதை தட்டுப்பாடு

கும்பகோணம், : கும்பகோணம் பகுதியில் அரசு வேளாண் மையங்களில் உளுந்து விதைகளை தனியாருக்கு அதிகாரிகளே விற்பனை செய்வதால் உளுந்து விதை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளாகவும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தஞ்சை மாவட்டம் கும்பகோணம், திருவிடைமருதூர்,

திருப்பனந்தாள் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது உளுந்து பறிக்கும் பணி முடிந்து உலர்த்தும் பணி நடைபெற்று வருகிறது. கும்பகோணம் பகுதியில் கொற்கை, மானம்பாடி, வாளபுரம், கடிச்சபாடி, திருப்புறம்பியம் உள்ளிட்ட சுற்று பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் அளவில் நெல்தரிசு என்று நெல் அறுவடைக்கு ஒரு வாரத்திற்கு முன் உளுந்து விதைகளை தெளித்து விடுவார்கள்.

உளுந்து விதையை ஜனவரி மாதம் தெளிக்கப்படும். அதன் பின் நெல் அறுவடை முடிந்த பின் ஏப்ரல் மாதம் உளுந்து பறிக்கும் பணி நடைபெறும். அதன் பின் உளுந்து செடியை காய வைத்து உளுந்தை தனியாக எடுத்து வியாபாரம் செய்வது வழக்கம். மேலும் வரும் சித்திரை பட்டத்திற்காக இந்த மாதம் இறுதியில் இரவல் உளுந்து என்ற முறையில் தெளித்து ஆகஸ்ட் மாதம் பறிக்கப்படும். அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இது குறித்து விவசாயி சுவாமிமலை விமலநாதன் கூறுகையில், தற்போது உளுந்து சாகுபடி பணிகள் தொடங்கியுள்ளன. அரசு உளுந்து விதைகளை விவசாயிகளுக்கு வழங்காமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும், ஆளுங்கட்சியினருக்கும், வேளாண்மை மையம் மூலம் வழங்கி வருகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு விதைகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் உளுந்து பயிரிடுவதை குறைத்து வருகின்றனர். வேளாண் மையத்தில் உள்ள உளுந்து விதைகளை அங்குள்ள அதிகாரிகளே தனியாருக்கு அதிக விலையில் விற்பனை செய்துள்ளார்களா என்று ஆய்வு நடக்க வேண்டும். இதனால் தான் வேளாண் மையத்தில் அரசு உளுந்து விதை கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அரசு சார்பில் வழங்கப்படும் உளுந்து விதைகள் தரமானதாக இருக்கும். ஆனால் தனியாரிடம் வாங்கும் விதைகள் தரமற்றதாகஇருக்கும்.

இதனால் உளுந்திற்காக செலவு செய்த தொகை அனைத்தும் வீணாகிவிடும். அரசு வேளாண் மையத்தில் ஒரு கிலோ உளுந்து விதை ரூ.80. ஆனால் தனியாரிடம் ஒரு கிலோ ரூ.210 ஆகும். விலை உயர்ந்த

விதைகளை வாங்கி விதைத்தாலும் தரமற்று உள்ளதாக விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். இது போன்ற விதை பற்றாகுறை வரும் என்று கடந்த ஜனவரி மாதம் தஞ்சையில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலெக்டரிடம் புகார் அளித்திருந்தோம். ஆனால் கலெக்டர் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டதால் இது போன்ற விதை பற்றாகுறைகளும். தரமற்ற விதைகளும், அதிகாரிகளே அரசு விதைகளை தனியாருக்கு விற்பனை செய்யும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் உளுந்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## விற்பனைக்கு கொடுவா மீன் வரத்து அதிகரிப்பு

முத்துப்பேட்டை : முத்துப்பேட்டை மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்காக கொடுவா மீன் அதிகளவு வந்து கொண்டிருக்கிறது. திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை கடற்பகுதியில் நல்ல ருசி கொண்ட கொடுவா மீன்கள் அதிகளவு இனவிருத்தி ஆகிறது. ஆனால் இந்த மீன்கள் அருகில் உள்ள கோடியக்கரை, வேதாரண்யம், தோப்புத்துறை பகுதிகளில் மீனவர்கள் வலையில் சிக்குகிறது. அந்த பகுதிகளில் இருந்து முத்துப்பேட்டை ஆசாத் நகர் மற்றும் பெரியகடைத்தெரு மீன் மார்க்கெட்டுக்கு அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

சமீப காலமாக இப்பகுதிக்கு கொடுவா மீன்கள் அதிகளவில் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. ஆனால் விலை குறையவில்லை.

கிலோ 450 முதல் 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு சிறிய மீன் 10 கிலோ வரையிலும், பெரிய மீன் 25 முதல் 50 கிலோ வரை உள்ளது. மீன் பெரிதாக இருந்தால் ருசி அதிகமாக இருக்கும். கொடுவா மீன் அதிக ருசி கொண்டது என்பதால் மீன் பிரியர்கள் பல பகுதிகளிலிருந்து முத்துப்பேட்டை மீன் மார்க்கெட்டிற்கு வந்து வாங்கி செல்கின்றனர்.

இது குறித்து பெரிய கடைத்தெரு மீன் வியாபாரி சாரிப் கூறுகையில், அதிகளவில் ருசி கொண்ட இப்பகுதி கொடுவா மீனுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் அதிக மவுசு உண்டு. தற்பொழுது கொடுவா மீன்களின் வரத்து அதிகமாக உள்ளது. ஆனால் விலை

குறையவில்லை. தற்பொழுது கிலோ ரூ.500க்கு விற்பனை செய்து வருகிறோம் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் விரும்பி வாங்கும் பிளம்ஸ் பழங்கள் கிலோ ரூ.200–க்கு விற்பனை



கொடைக்கானல்,

கொடைக்கானலில் பிளம்ஸ் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. ஒரு கிலோ ரூ.200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை சுற்றுலா பயணிகள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

<u>பிளம்ஸ் பழங்கள்</u>

கோடைவிடுமுறையை உற்சாகமாக கழிக்க ஒவ்வொருவரும் ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட பகுதிகளுக்கு சுற்றுலா செல்வதுண்டு.

அந்தவகையில் தற்போது கொடைக்கானலில் இதமான சீதோஷ்ணநிலை நிலவி வருவதால் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

அங்கு அவர்கள் இயற்கையின் அழகை கண்டு ரசிப்பதோடு, ஆனந்தமாக படகுசவாரி செய்தும் மகிழ்கின்றனர். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் சுற்றுலா தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொடைக்கானலில் அவக்கோடோ, மணத்தக்காளி, பிளம்ஸ், பேரிக்காய் உள்ளிட்ட பழங்கள் சீசன் காலங்களில் விற்பனைக்கு வரும். தற்போது பிளம்ஸ் பழங்கள் சீசன் தொடங்கி உள்ளது. இதனால் அதிக அளவில் பிளம்ஸ் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

<u>ரூ.200–க்கு விற்பனை</u>

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறும்போது, 'கொடைக்கானலில் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மட்டுமே பிளம்ஸ் பழங்கள் சீசன் இருக்கும். கொடைக்கானலில் விளையும் பிளம்ஸ் பழங்களுக்கு தனி மவுசு உண்டு. பிளம்ஸ் பழங்களில் சுவீட் பிளம்ஸ், கரிபிளம்ஸ் உள்ளிட்ட ரகங்கள் உள்ளன. இந்த பழங்கள் சீசன் சமயங்களில் அதிக அளவில் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தற்போது ஒரு கிலோ பிளம்ஸ் பழம் ரூ.180 முதல் ரூ.200 வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை அதிகம் என்றாலும் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் விரும்பி வாங்கி செல்கின்றனர். வரத்து அதிகரிக்க, அதிகரிக்க விலை குறைய வாய்ப்புள்ளது' என்றார்.

## கிருஷ்ணகிரி அணையில் மதகுகளை சீரமைக்கும் பணி தீவிரம்



கிருஷ்ணகிரி அணையில் மதகுகளை சீரமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

கிருஷ்ணகிரிஅணை

கர்நாடக மாநிலம் நந்திமலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணையாறு அங்கிருந்து ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு வருகிறது. அங்கிருந்து தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீர் கிருஷ்ணகிரி அணைக்கு வருகிறது. இங்கிருந்து தண்ணீர் காவேரிப்பட்டணம் வழியாக பாரூர் பெரிய ஏரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களுக்கு சென்று கடலில் கலக்கிறது.

கிருஷ்ணகிரி அணை 1955-ம் ஆண்டு கட்டப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளாக சிறிய அளவில் பராமரிப்பு பணிகள் நடந்து வந்தன. இந்த நிலையில் தற்போது அணையில் உள்ள 8 மதகுகளை சீரமைக்கும் பணி

தீவிரமாக நடந்து வருகிறது. கிருஷ்ணகிரி அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 52 அடியாகும். தற்போது 46 அடி தண்ணீர் உள்ளது.

அணைக்கு தற்போது வினாடிக்கு 120 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது. அணையில் மதகுகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதின் காரணமாக வினாடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. பாசனத்திற்காக தண்ணீர் இருப்பு வைக்காமல் தற்போது கோடை காலத்தில் அதிக அளவில் தண்ணீர் திறந்து விடுவதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதனால் விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் சிரமப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக கிருஷ்ணகிரி அணையின் உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ்கூறியதாவது:-

முழுவீச்சில்நடக்கிறது

கிருஷ்ணகிரி அணையில் உள்ள மதகுகளை சீரமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. இதற்காக ரூ.1 கோடியே 10 லட்சம் நிதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது முதல் போக சாகுபடி நெல் அறுவடை நடப்பதால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட முடியாத நிலை உள்ளது. அதனால் ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு ஆண்டிற்கு டெண்டர் விடப்பட்டுள்ள நிலையில், இன்னும் 4 மாதங்களுக்குள் 2-ம் போக சாகுபடி மேற்கொள்ளும் முன்பாகவே பணிகளை முடிக்க திட்டமிட்டு முழுவீச்சில் நடந்து வருகிறது. மேலும், மதகுகளின் கீழ் பகுதியில் சீரமைக்க உள்ளதால் 36 அடிக்கு கீழ் தண்ணீர் குறைக்க வேண்டி உள்ளது. இதன் காரணமாகவே தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.